

திருவண்ணாமலை
...கோபரமேஸ்வரி பதிகம்

13
925:38.213 M
N17
125246

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹயக்ரீவாய நம:

# திருவண்ணாமலை
# ஸ்ரீகன்னிகாபரமேச்வரி
# பதிகம்.

திருவெண்ணெய்நல்லூர்

நரசிம்மபாகவதர் அவர்களாலியற்றி

திருமலை நல்லான் சக்ரவர்த்தி ஸிம்ஹாஸனாசார்ய
ஸ்ரீமதேயாத் இராமாநுஜாசார்ய
ஸ்வாமிகளாலும்

திராவிடப்ரபன்னவித்வான்
திருவண்ணாமலை ஸ்ரீமான்
கோவிந்தஸாமிப்பிள்ளை அவர்களாலும்
பரிசோதித்து.

திருவண்ணாமலை ஸ்ரீ கன்னிகாபரமேச்வரி
தேவஸ்தான தர்மகர்த்தர் மகா-ா-ா-ஸ்ரீ
பா முனிசாமிசெட்டியார் அவர்களால்

திருவண்ணாமலை மனோன்மணி நர்த்தனம்
அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றன
20-6-1917.

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹயக்ரீவாயநம:

திருவண்ணாமலை

# ஸ்ரீ கன்னிகாபரமேச்வரிப் பதிகம்

25246

நேரிசைவெண்பா,

சீரார்வயலருணைச் செல்விவாசாம்பிகைமே
லோரிசைப்பதிக மேற்றிடவேகாரார்
கரியானைக்கன் றுதவுங் காரணனை வேதப்
பெரியானை நன்மனனேபேசு

நூல்

எழுசீர்கழி நெடிலாசிரியவிருத்தம்.

அருணமணி நிலவுபுகழொளி பாவுமதியமுத
மணிகணணி யொருதவசினேர்
அவிர்கொளிமவரை யனையதகைமைபலமணிகளணி
யழகுநிறை யதிகமெனவே

பொருணலமுளமையு மிருவினைகளறுமலையமணி
புகழுமொருபது மநிதியே
புதினமனையிளகு புதரிணியமலரிசைபலளி
புனையுமடி விறையுமதியே

கருணைதருமருளி னெளிதெனவளருமருமையுள
கனகமலை யருணமலையே
கதிபரவு மிளமைநனி கொளுமுருவினளினவிழி
களியினறை யொழுகுமகமே

வருணதனவைசியகுல முறைவளா நெடியசுப
மருவுமருளருளுருவே
மாசிலாக்குணசாலி கேசவார்ப்பிதசீலி
வாசவாம்பிகை யம்மையே

ஆகம் புராணமதியாலணிம்கோதயமு
ளாரருள்பராவு நிதியாய்
ஆகமநிதானி பரமாகுமுரூவாணிகரு
ணாகரி வரோதயகதி

நாகமலிகாணவமுதாரு மனதாருநவ
நாதமணி நாரணிமணி
காமவரதாமி நளினாலயவனாமிநய
நாத சுகதாமகருணீ

யோகமுதலாகுநவநீதனருளாலினிது
வோகைபெறு ராஜஸதனி
ஓதுமறையாலி பரிவாகுமருளாலியுனை
யோதுமவராகு பெயரே

மாகநதிகூடுமருணாசல முளோங்குபெரு
மாதரசியே யருளவே
மாசிலாக்குணசாலி கேசவார்ப்பிதசீலி
வாசவாம்பிகை யம்மையே 2

இனியகலைதமிழினிசை யெழிலுமதிபொருளுமணி
யியலு மிருவகையுமெணிலா
திடமுனருளெனமுனுரை யெழுதுமிதிலெளியனுலை
யிளகுமுனதிதயமதியே

கனிவுபெற நிலவுமருளருளியவமுழுதுமிரி
கருணைதர வருகவினிதே
கமலமலரனைய நயனமுகமதிகவினமணி
கலையினொளி கமலவுருவே

புனிதமணிப்பெருமணிநிறை பொறைகொணனிநிரையுமதி
பொருவிலணி சொருபகுணியே
புரமுமிடைநகரினணி பொருளும்நவமணியும் வளர்
புறவுதவிழினிய நலமே

வனிதமணிதழலியொளி மருவுகுலமருணகிரி
வளருமனே வருகவருக
மாசிலாக்ஞணசாலி கேசவார்ப்பிதசீலி
வாசவாம்பிகை யம்மையே 3

ஈரமதியனைய்நின்வதனமும் மெழில்கொண்ட
வின்னிளம்பூத்த பிறைபோ
லிலகு நுதல்கருணையங்கடலாமருட்கண்ணி
னிறையமுதமாரு நலமார்

சீரகமகிழ்ப்பரிவுகாட்டுமுன் முறுவல்பூத்
தென்னசிறுவாய் நிறைக்குஞ்
செவ்வியகபோலமுஞ் சிவமளாந்தருகுமொழி
திறலருட் கருணைகாணக்

காரணவிலக்கணக் கையிலங்காமலக
காமபயவரத மருளக்
கன்னிகாபரமேசுவரி யெனுந்திருநாமக்
காரிகைத்தரும வளமே

வாரணத்திரையளாவிய வருணகிரியிலொளிர்
வைசியகுலத் தங்கமே
மாசிலாக்குணசாலி கேசவார்ப்பிதசீலி
வாசவாம்பிகை யம்மையே 4

ஐனதுபெருமாலயத்துட் புக்கிவலமிடத்
தோங்கு செல்வங்கிடைக்கும்
உணர்வினுலின் கவிப்பாடவருள்சித்திக்கு
முன்னுமை மோதுமடியார்
தனதுசங்கங்கூடிலவ மறுந்தன தான்ய
சம்பத்தெலாம்பலிக்கும்
தாவுமதிநின் னுருவு தரிசிக்கில்நிதநிதம்
சாந்தமுறு மளவிலாங்கே
கனகமணியாலழகு காட்டுநின் கமலபத
காட்சியாற்கரவு நீங்கும்
கன்னிகாபரமேசுவரி யெனச்சொலுமெனக்
களவிலாக் கருணை தருவாய்
மன்கனகிரிமேவு மருணகிரிவாழ்பரம
வல்லியே வந்தருளுவாய்
மாசிலாக்குணசாலி கேசவார்ப்பிதசீலி
வாசவாம்பிகை யம்மையே 5

ஊதுகுழல்வேணுகோபாலனெம்மன்னையோக
டொளிரு மருணாசலமெனு
தோங்குநில நீர்வளத்தொருபாகமுன்னிலணி
யுயர்தக்கணத் திசையுளே
கோதிலணிசினகரச் சித்ரகூடத்துணவ
கோணிலைத்திசை மாகமுட்
குங்குமக்காவி பூத்தொளிரனையமணி பூத்த
கோகனக மேலமர்ந்து
மூதுரைபழிச்சகல மோங்குமிசைபூப்பநின்
மூலதலமுக மேற்றிட
முன்னிடுதவத்தாகி லத்தவர்நிரைத்தபணி
மோனமாரணி போற்றிட
மாதுவுமைபாகனார் வாழருணகிரியிலொளிர்
வடிவுடைய மாணிக்கமே
மாசிலாக்குணசாலி கேசவார்ப்பிதசீலி 6
வாசவாம்பிகை யம்மையே

175246

எண்ணரியகுலமுளே நண்ணும்வைசியகுலமு
ளெழில்கொண்டபெனுகொண்டையில்
இணையிலாப்பெள்ளிகுல கோத்திரச்சீர்பெற்று
இமையவதியருளுற்றகா
லண்ணல்விட்டுணு வர்த்தனன்போகமேயறிந்
தன்னரக மேகவடைவித்
தாங்குறுகுலத்தினோர்க் கழிவுறுவனற்குழியி
லாக்கிநீராடிமோனத்
துண்ணரியதேவனார் தூய்மலரடிபுகுந்
திறையுமாதொரு தெய்வமாய்
உலகுபுகழரிய ஞானசக்தியாகுமுன
துண்மைபருளாகுமுறவே
மண்ணிலமுளோங்குமிடைநாடருணகிரியிலொளிர்
மாதாவெனக்கருளுவாய்
மாசிலாக்குணசாலிகேசவார்ப்பிதசீலி
வாசவாம்பிகையம்மையே ௭

எழிசைக்கருவிகரமேந்துகைக்கமலமல
ரேறிசெங்கமலமேறி
எழில்சீயமேறியிந்த்ராணியருளேறிகல்
லியல்பூத்தகன்னிகையெனு
தாழிசைப்பவளவாயாண்டருளு மின்புகழு
மாதீன மகில முழுதே
அனகனகராஜராஜேச்வரி நித்யகல்
யாணி சுபமங்களவதி
கேழிசைக்கிள ரொளிகளுலருட்பொருளுதவு
கேணமைத்திடுமுதவிகாண்
கீர்த்தி நலமேற்றுபொருண்மூர்த்தி பரமார்த்திகுண
கேகயச்சாயலனையே
வாழிசைத்தருள் கன்னிகா பராத்பரியருணை
வாழுமுத்தமி யருளுவாய்
மாசிலாக்குணசாலி கேசவார்ப்பிதசீலி
வாசவாம்பிகை யம்மையே. ௮

ஒண்டொடிச்செல்வி யுலகோர்பரவுமொருசெல்வி
உத்தமச்செல்வி யுயர்சீர்
ஓதுதவசெல்வி மறையோதருணசெல்விவள
மோங்கு மருள்செல்விகுணமார்
தண்டமிழ்ச்செல்வி தாமரைவந்தசெல்விமலை
தந்தசெல்விச் சீரருட்
டாங்குவைசியகுலச் செல்விமரகதசெல்வி
தமனியத்தங்க செல்வி
தொண்டர்தஞ்செல்வி துணையருள்செல்விமறைசெல்வி
துதிபரவு நற்செல்வியே
தோகையுனதருளலான் வேறுசதியிலையெனச்
சொல்லுநூற் பலவுளாங்கே
வண்டமிழ்ச்செல்வி திருவாழிகிரி யெனுமருணை
வாழுமுத்தமி யருளுவாய்
மாசிலாக்குணசாலி கேசவார்ப்பிதசீலி
வாசவாம்பிகை யம்மையே 9

ஓமமணியேகமணி யோரதிலாதமணி
யூடபரமாகிய மணி
உத்தமமணிச் செல்வமோங்குமணி உலகுபுக
ழூரியசுத்தாத் மகமணி
நீமமணிமுச்சத்தியாகுமணி நீலமணி
நெடிய செங்காலியமணி
நிட்டானுபூதிமணி நிலயமணிநிகிலமணி
நித்திலத்திலகு மணியே
நாமமணி கன்னிகாபரமேட்டிநாகமணி
நவிலுமணி மேகலைமணி
நாடுமடியவருள மமர்ந்திடும்நன் மணி
நல்வைசிய குலதனமணி
வாமமணிசதமேக கோத்ரமணியருணைமணி
வாழத்தமெமனை யருளவருவாய்
மாசிலாக்குணசாலி கேசவார்ப்பிதசீலி
வாசவாம்பிகை யம்மையே 10

ஞானமலையாருமகவானதி பெருக்குமலை
மானமலை வானமலைதாழ்
தாணுமலைவேணுமலை யானைகமேருமலை
தாசரதிராத மலைமே

ஞானகிரிவாசகிரியாமருத சோணகிரி
யாதிச்சேவகிரிகா
ஞதவணிஞருகிரி மேதிகிரிகாணகில
தாருகிரியாயகிரிபோ

னேனசிலையானை சிலைதேனசிலைகாணசிலை
யேறுயர் கொண்டசிலைபா
னேறுசிலையாரு சிலைகாரிருள்பராவுசிலை
யேநிகரிலாத வடியார்

மானமலையாமருண மாமலையினோர்வரு
மாசவியெனக்கருளுவாய்
மாசிலாக்குணசாலி கேசவமார்ப்பிதசீலி
வாசவாம்பிகையம்மையே 11

## வாழி

வாழிமாதவனம் மருணைவலன்
வாழிசீர் வாசவாம்பிகைப்பொன்னடி
வாழிவைசிய மாக்குலத்தோர்களும்
வாழியாண்டும் வழுத்துவோர்வாழியே

ஸம்பூர்ணம்